
# அழைத்தல்




**நித்தியத்திலிருந்து நித்தியம் வரை**

## பாடம் இரண்டு

முதல் ஜீவாத்துமா ஆதாம். ஆகையால் எல்லா ஜீவாத்துமாக்களுக்கும் அவனுடைய குணங்களே நிரந்தரமானவைகள் ஆயின. உடலாலும், மனதாலும் அவனைப் போலவே நாம் இருக்கிறோம். "மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினான். ஆதாமே மனித குலம் முழுவதற்கும் முதன்மையானவன். ***1 கொரி. 15:45-49; ரோமர் 5:14.***

ஆதாம், கிறிஸ்துவுக்கு முன் அடையாளமானவன் இதில் இயேசு கிறிஸ்து குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டத்திற்கு தலைவராக இருக்கிறார். இந்த உலகில் வாழும் ஆவிக்குரிய ராஜ்ஜியத்தை சேர்ந்தவர்களும் மறுபடியும் பிறந்தவர்களுமான மக்களுக்கு அவர் தலைவராக இருக்கிறார். ***கிறிஸ்தவர்கள் உன்னதங்களிலே கிறிஸ்துவோடு கூட உட்கார்ந்திருக்கிறார்கள் எபேசியர் 2:7.***

ஆதாம் பிரச்சனைக்குள்ளானான், மட்டுமல்லாமல் தன்னைப் போன்றே இயல்புடன் பிறந்திருக்கிற ஜீவாத்துமாக்களும் சரீர ரீதியிலும், ஆவிக்குரிய ரீதியிலும் துன்பங்களை அனுபவிக்கிறதற்கும் இவனே காரணமானான். தேவன்




நம்மை தம்முடைய பிள்ளைகளாக்கிக்கொள்ளும் திட்டம் தொடர்ந்து செயல்படுவதற்கு நம்முடைய சரீர மரணம் அவசியம்.

***ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். 1 கொரி. 15:22.***

இப்படி தான் தவறு நிகழ்ந்தது. நன்மை தீமை அறியக்கூடிய ஆற்றல் உடையவர்களாக தேவன் அவர்களை படைக்கவில்லை. இந்த அறிவு ஆற்றல் கொண்டவர்களாக சரீரத்தில் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்பவில்லை. நாம் எல்லா சமயத்திலும் நல்லதை தேர்ந்தெடுப்பதில்லை; அதுவே தீமையாக இருக்கிறது, அது பாவம்.

ஆதாம், ஏவாளிடமிருந்து தேவன் ஒரு ஆசீர்வாதத்தை விலக்கி வைத்திருக்கிறார் என்று சாத்தான் அவர்களை நம்பும்படி செய்தான். இதன் விளைவாக, தேவனுடைய நேரடியான கட்டளையை மீறி நன்மைதீமை அறியத்தக்க அறிவு ஆற்றலை அவர்கள் அடைந்தார்கள். ஆதியாகமம் 3ம் அதிகாரத்தை வாசிக்கவும். சரீரத்தின்படி பிறந்த எல்லா மக்களுக்கும் ஆதாம் முதன்மையானபடியால் இயல்பாய் பிறந்த எல்லாப் பிள்ளைகளும் நன்மை தீமை அறியத்தக்க அறிவு ஆற்றலை வளர்த்துக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

ஆதாம் தேவனுக்கு கீழ்ப்படியாமற்போனபோது அவன் பாவம் செய்தான். அவன் பாவம் அவனை தேவனிடமிருந்து பிரித்தது. 'மரணம்' என்றால் பிரிவு. இந்த இடத்தில் அது தேவனுடைய திட்டத்தை பிரிந்து வாழ்கின்ற கீழ் தரமான வாழ்க்கையை குறிக்கின்றது ***எபேசியர் 2:1-3.*** பாவமும், மரணமும் ஆதாம் மூலமாக உலகத்திற்கு வந்தன. எல்லாரும் பாவிகளாக பிறந்ததினால் அல்ல. எல்லாரும் பாவஞ்செய்ததினாலே எல்லாருக்கும் மரணம் வந்தது.






நமக்கு நன்மை, தீமை அறியத்தக்க அறிவு இருப்பதினாலே நாம் எல்லாரும் ஆதாமுடைய சுபாவத்தின்படி பாவம் செய்து ஆவிக்குரிய ரீதியிலே மரிக்கிறோம். நாம் குழந்தைகளாய் இருந்து பெரியவர்களாகும்போது நிச்சயமாக இந்த அறிவை செயல்படுத்துகிறோம். இந்த எல்லா விஷயங்களையும் பின்வரும் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு விவரிக்கிறான்.

***இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று.***

***நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.***

***அப்படியிருந்தும் மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன். ரோமர் 5:12-14.***

குழந்தைகளாய் இருந்து பெரியவர்களாகி ஆதாமுக்குள் இந்த உலகில் வாழ்கிற எல்லாருக்கும் பாவமும், மரணமும் தான் மிகப் பெரிய பிரச்சனைகள். இதை உறுதிபடுத்தும் விதமாக பாவம் செய்கின்ற அனைவர்மேலும் தேவனுடைய கோபாக்கினை வரும்படியாய் மோசேயின் நியாயப்பிரமாண சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆதாமுக்குள்ளிருக்கிற எல்லாருக்கும் உள்ள மிகப்பெரிய நான்கு பிரச்சனைகள் என்னவென்றால்,

1. பாவம் 2. மரணம் 3. நியாயப்பிரமாணம் 4. தேவ கோபாக்கினை ஆகும். ***ரோமர் 5:12-21*** வாசிக்கவும். தேவனுக்கு இந்த பிரச்சனைகள் எல்லாம் தெரியும். ஆகையால் காலம் நிறைவேறினபோது,




ஒரு புதிய ராஜ்ஜியத்தை ஏற்படுத்தி, அதில் தம்முடைய பிள்ளைகளை சேர்த்துக்கொள்வதற்காக இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். இயேசுவும், ஆதாமுடைய இயல்பின்படி பிறந்தவர் தான். அவர் நன்மை, தீமைஅறியத்தக்க அறிவுடையவராய் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தார்.



இருந்த போதிலும் ஒரு போதும் தீமையை நேர்ந்தெடுக்கவே இல்லை. இந்த காரணத்துக்காகவே, ஆதாமுடைய இயல்பின்படி பிறந்த எல்லா மனுஷருடைய பாவத்துக்காகவும் அவர் விரும்பினால் பலியாகலாம் என்ற நிலை இருந்தது. இயேசுவானவரோ யூத மார்க்கத் தலைவர்களால் சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்படும்படி தம்மை அனுமதித்து நமக்காகத் தம்மை பலியிட்டார் ***யோவான் 10:18*** அவர் தம்முடைய பாவங்களுக்காக அல்ல, நமது நிமித்தமே ஒரு பாவியாக மரித்தார். அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார், ஆனால் தேவன் அவரை உயிர்த்தெழுப்பினார் ***2 கொரி. 5:21.***

தேவன் இயேசுவை உயிருடனேயே எழுப்பிவிட்டார். அவரை தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, ஆவிக்குரிய ஒரு புதிய ராஜ்ஜியத்திற்கு அவரைத் தலைவராக ஏற்படுத்தி, அந்த ராஜ்ஜியத்திற்குள்ளானவர்களை கிறிஸ்துவுக்குள்ளானவர்கள் என்று அழைக்கிறார். ***எபேசியர் 2:7 ; அப்போஸ்தலர் 2:32-36.***

இப்பொழுது பூமியில் இந்த தேவனுடைய ராஜ்ஜியத்தை ஆளுகிற ராஜாவாகவும் அதில் பிரதான ஆசாரியராகவும் இயேசு கிறிஸ்துவே இருக்கிறார். ***யோவான் 18:37; அப். 2:32-36*** 'சபை' என்ற வார்த்தை வெளியே அழைக்கப்பட்ட மக்களை குறிப்பதனால் கிறிஸ்து நம்மை வெளியே அழைத்திருக்கிறார் என்று புரிந்துகொள்கிறோம். இப்படியாக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சபையாக இருக்கிறார்கள். ***1 தெசலோ. 2:14.***

ஆதாமுடைய இயல்பை கிறிஸ்தவர்கள் இந்த பூமியில் பெற்றிருந்தாலும், கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்தை நாம் வளர்த்துக்கொள்ளமுடியும் ***2 பேதுரு 1:4*** 'கிறிஸ்துவுக்குள்' ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் இருக்கிறதினால் நாம் புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளுகிறபோது, அவரைப் போலவே மாறமுடியும். ***எபி. 10:16.17.***


"எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய போது முன் குறிக்கப்பட்டவர்களையே தேவன் "அழைக்கிறார்" என்று கூறினான்; தேவன், நன்மை, தீமை அறியத்தக்க வயதுள்ளவர்களாய் இந்தப் பூமியில் வாழும் எல்லாருக்கும் வாய்ப்பை கொடுக்கிறார் என்பதே இதின் ஒட்டுமொத்த கருத்தாகும். ***ரோமர் 8:30.*** சாத்தானுடைய ராஜ்ஜியத்தின் கீழ் இந்த உலகத்தில் இருப்பவர்களை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே தேவன் அழைக்கிறார்.

***நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார். 2 தெசலோ. 2:14.***

தேவனுடைய ராஜ்ஜியத்தையும் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலையும் பற்றிய செய்தியே நற்செய்தி அல்லது சுவிசேஷம். உலக மக்களின் விசுவாசத்திற்கு இதுவே ஆதாரமானது. ***1 கொரி. 15:1-5*** இந்த சுவிசேஷத்தில் மக்கள் வைக்கும் விசுவாசமே அவர்களை புதிய பிறப்பிற்கு வழி நடத்தும். ***அப்போ. 8:12; 20:21*** அவர்கள் மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று நாவினாலே அறிக்கையிட்டு, அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் சாயலில் இணையும்படியாய் ஞானஸ்நானம் பெறும்போது அந்தப் புதிய பிறப்பை அவர்கள் அடைகிறார்கள். ***அப்போஸ்தலர் 2:38.***

தேவனுடைய ராஜ்ஜியத்தில் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை வாழ்வதற்கு ஒவ்வொரு மனிதனும் மறுபடியும் பிறந்தாகவேண்டும் ***யோவான் 3:3-6*** அவர்கள் கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திற்குள் இப்பொழுதே வந்தாகவேண்டும். ***கொலோசெயர் 1:13.***

ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய ராஜ்ஜியத்தில் அவருடைய மகனாக தனது முக்கிய பங்கைப் பற்றிய செய்தியை கேள்விப்பட்டு. விசுவாசிக்கும்போது தான் மனதில் உண்டாகும் மாற்றமாகிய மனந்திரும்புதல் உண்டாகமுடியும். தேவன் எதற்காக தங்களை படைத்தாரோ அதை நிறைவேற்றுவதற்கு தாங்கள் தான் முடிவு எடுக்கவேண்டும். உலகத்தில் வாழும் மக்களுடைய மனதில் மனந்திரும்புதல் இடம் பெற்ற பிற்பாடு, அவர்கள் ஞானஸ்நானம் பெறும் போது தான் அவர்கள் புதிய பிறப்பு பெறுவதற்கான மாற்றம் நிகழ்கின்றது. "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல,






நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்'' ***ரோமர் 6:4*** பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுலும்கூட தன்னுடைய கடந்த கால பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறுவதற்கு தண்ணீருக்குள் அடக்கம்பண்ணுதலாகிய இந்த ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டான். ***அப்போஸ்தலர் 22:16.***

யாரெல்லாம் இந்தப் பாடத்தை படித்துப் புரிந்துகொள்ளக்கூடிய வயதில் இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் நன்மை, தீமை அறியத்தக்க அறிவை பெற்றிருக்கிறார்கள் அவர்கள் நன்மையை தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அவர்கள் தீமையையும் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். இது தான் பாவம். இந்த பாவமே அவர்களுக்கு ஆவிக்குரிய மரணத்தை கொண்டுவந்திருக்கிறது இவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதற்கென்று சிருஷ்டிக்கப்பட்ட படியால் சுவிசேஷத்தினாலே தேவன் இவர்களை அழைக்கிறார். எவர் ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்பது தேவனுடைய திட்டம் ***2 பேதுரு 3:9.***

இதில் குறிப்பிடத்தக்க இரண்டு பெரிய நிகழ்வுகள் என்னவென்றால்: ஒரு புதிய ராஜ்ஜியத்திற்குள் நாம் நுழையக்கூடிய வாய்ப்பை வழங்குகிறார், ஒரு மனிதன் மறுபடியும் பிறக்கமுடியும் என்பவைகளே. புதிய ராஜ்ஜியம் என்பது கிறிஸ்துவுக்குள்ளான ராஜ்ஜியம். புதிய பிறப்பின் மூலம் உலக ராஜ்ஜியத்திலிருந்து நாம் கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திற்கு செல்லும் வாய்ப்பை பெறுகிறோம். நீ கிறிஸ்தவனாக இல்லை என்றால் சுவிசேஷம் இப்பொழுதே உன்னை அழைக்கிறது.

அடுத்த பாடத்தில் புதிய உடன்படிக்கை பற்றி நாம் பார்ப்போம்.

**பயிற்சிக் கேள்விகள் — பாடம் இரண்டு**

***I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :***

1. மரணம் என்ற பிரச்சனை மனித குலத்திற்கு வந்ததற்கான காரணம்
   (அ) நாம் பாவத்தில் பிறந்திருக்கிறோம்.
   (ஆ) நாம் எல்லாரும் பாவஞ்செய்துவிட்டோம்
2. உடலை விட்டு உயிர் பிரிவது தான் மரணம். அது மட்டுமல்லாமல் மரணம் இதையும் குறிக்கின்றது.
   (அ) தேவனை விட்டு விலகிய கீழ்த்தரமான வாழ்க்கை
   (ஆ) இறந்த நிலையில் குழந்தை பிறப்பது



3. ஆதாம், ஏவாள் இவ்வாறு உண்டாக்கப்பட்டார்கள்.
   (அ) நன்மை தீமை அறியத்தக்க அறிவாற்றலுடன்
   (ஆ) நன்மை தீமை அறியத்தக்க அறிவில்லாமல்
4. ஆதாம் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவன், ஏனென்றால்
   (அ) அவனே உலகத்திற்கு முதலில் வந்தவன்
   (ஆ) இரண்டு பேருமே குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டத்தின் பிரதி நிதிகள்
5. தேவனுடைய ராஜ்ஜியத்தில் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியுடன் வாழ,
   (அ) மறுபடியும் பிறக்கவேண்டும்
   (ஆ) சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு மனந்திரும்பவேண்டும்.

***II. கோடிட்ட இடங்களை நிரப்ப இப்பாடத்தின் வசனங்களைப் படியுங்கள் :***

1. வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, .................................................................... அப்படிப்பட்டவர்களே.
2. அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் .......................................................................... கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.
3. நம்முடைய ....................................... ................................................ மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.
4. எல்லா மனுஷரும் ..................................................................மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.
5. எவர்களை முன் குறித்தாரோ அவர்களை ........................................

***III. சரியா? தவறா? எனக் குறியிடுக :***

1. நன்மை தீமை அறியத்தக்க அறிவு நமக்கு வேண்டாமென தேவன் நினைத்தார்.
   சரி ☐ தவறு ☐
2. இயேசுவே உலக ராஜ்ஜியத்தை ஆளுகிறவர்
   சரி ☐ தவறு ☐
3. எல்லாரும் பாவஞ்செய்தபடியால் எல்லாருக்கும் மரணம் வந்தது.
   சரி ☐ தவறு ☐
4. கிறிஸ்து வருவதற்கு முன்பு மனுக்குலம் எதிர்கொண்ட 4 பெரிய பிரச்சனைகளில் மோசேயின் நியாயப்பிரமாணமும் ஒன்று
   சரி ☐ தவறு ☐



5. இயேசுவின் விருப்பத்திற்கு மாறாக யூத மார்க்கத் தலைவர்கள் அவரைக் கொன்றுவிட்டார்கள்.
   சரி ☐ தவறு ☐
6. கிறிஸ்தவர்கள் மறுபடியும் பிறந்தபொழுது நன்மை தீமை அறியத்தக்க அறிவிலிருந்து விடுதலையாகிவிட்டனர்.
   சரி ☐ தவறு ☐
7. உலகத்திலுள்ள மக்களை தேவன் சுவிசேஷத்தினால் அழைக்கிறார்
   சரி ☐ தவறு ☐
8. உலகில் ஆதாமுக்குள் வாழ்கின்ற மக்களுக்கு பாவமே எஜமானனாக இருக்கிறது.
   சரி ☐ தவறு ☐
9. விசுவாசமும் மனந்திரும்புதலும் மட்டுமே நாம் மறுபடியும் பிறப்பதற்கு அவசியமானவைகள்.
   சரி ☐ தவறு ☐
10. யாரெல்லாம் இந்தப் பாடத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய வயதில் இருக்கிறார்களோ அவர்கள் நன்மை தீமை அறியத்தக்கவர்களாய் இருப்பதினால், பாவம் செய்திருக்கவும் வாய்ப்புண்டு.
    சரி ☐ தவறு ☐

தயவு செய்து உங்கள் பதில்களை ஓர் உறையில் போட்டு அஞ்சல் வழியாக அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.